DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

C.C.No. - 12/2022

Prosecution PW - 8

| | | |
|---|---|---|
| Name | சாந்தகுமாரி | Occupation |
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 05.05.2025 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 produced on PT warrant. A2, A4, A5 absent. 355 BNSS petition filed and allowed.

A3 present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது அறந்தாங்கி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த வருகிறேன். கடந்த 1.12.2019ம் தேதி 13.30மணிக்கு நாகப்பட்டிணம் போதைப்பொருள் நுண்ணறிவு காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது நாகப்பட்டிணம் கியூ பிரிவு குற்ற புலனாய்வு துறை காவல் ஆய்வாளர் அருண் பிரசாத் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த தனி அறிக்கையில் எதிரிகள் மூவர் மற்றும் கைப்பற்றப்பட்ட தடயப்பொருள்களை பெற்றுக்கொண்டு, சரிபார்க்கப்பட்டு, மேல் நடவடிக்கைக்காக 14.30மணிக்கு நிலைய ஆஜரில் இருந்த தலைமை காவலர் 515 சீனிவாசன் மற்றும் முதல் நிலை காவலர் 266 மூவேந்தன் ஆகியோர்களை மகசர் சாட்சிகளாக நியமித்து, 25கஞ்சா மூட்டைகளில் 23 கஞ்சா மூட்டைகளில் தலா 14 பாக்கெட்டுகள் வீதம் ஒவ்வொரு பாக்கெட்டும் தலா 2 கிலோ வீதம் ஒவ்வொரு மூட்டையிலும் 28 கிலோ கஞ்சா இருந்தது. மீதமுள்ள 2 கஞ்சா மூட்டைகளில் தலா 12 பாக்கெட்டுகள் வீதம் 24 பாக்கெட்டுகளில் 48 கிலோ கஞ்சா இருந்தது. ஆக மொத்தம் 25 கஞ்சா மூட்டைகளில் 692 கிலோ கஞ்சா இருந்தது. அதிலிருந்து நீதிமன்ற மாதிரி மற்றும் பகுப்பாய்வுக்காக ஒவ்வொரு கஞ்சா மூட்டையிலும் தலா இரண்டு 50 கிராம் வீதம் பாலிதின் பையில் எடுத்து, காக்கி பேப்பரால் மடித்து SHO சீல் வைத்து விபர சிலிப் ஒட்டினேன். 25 கஞ்சா மூட்டைகளிலும் 50 மாதிரி பாக்கெட்டுகள் தாலா 50 கிராம் வீதம் மொத்தம் 2.500 கிலோ கஞ்சா மாதிரிக்காக எடுத்தது போக மீதமுள்ள கஞ்சாவை அந்தந்த மூட்டைகளில் அடைத்து சணலால் கட்டி விபர சிலிப் ஒட்டி, SHO சீல் வைத்தேன். 25 கஞ்சா மூட்டைகளிலும் பிரிக்கப்பட்ட 346 காக்கி கவர்களை வெள்ளை சாக்கு பையில் போட்டு சணலால் கட்டி SHO சீல் வைத்து விபரம் சிலிப் ஒட்டினேன். மீதமுள்ள 25 கஞ்சா மூட்டைகள் ஏற்கனவே சாபொ.1 முதல் 25 ஆக குறியீடு செய்யப்பட்டது. மாதிரி கஞ்சா பொட்டலங்கள் 50 சாபொ.**27** முதல் சாபொ.**76** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் மாதிரி கஞ்சா பொட்டலங்கள் மற்றும் மீதமுள்ள 25 கஞ்சா மூட்டைகள், காலிகவர் மூட்டை,

கஞ்சா ஏற்றி வந்த வாகனம் TN34H5492 என்ற நீலநிற வேனை மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அசாஆ.5 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டது. காலி கவர் மூட்டை சாபொ.**77** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. வேன் ஏற்கனவே சாபொ.26 ஆக குறியீடு செய்யப்பட்டது. எதிரி சரவணனை 17.45 மணிக்கும், எதிரி அறிவேந்திரனை 18.00 மணிக்கும், எதிரி செந்தில் என்பவரை 18.15 மணிக்கும் குற்ற காரணம் கூறி கைது செய்தேன். பின்னர் நாகப்பட்டிணம் போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு குற்றஎண்.58/2019 பிரிவு 8(c), 20(b)(ii)(C), 29(1), 25 of NDPS Act ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ**.10.** பின்னர் எதிரி சரவணன் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் 19.30 மணிக்கும், எதிரி அறிவேந்திரன் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் 20.15 மணிக்கும், எதிரி செந்தில் குமார் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் 21.00 மணிக்கும் பதிவு செய்தேன். பின்னர் சாட்சிகள் சீனிவாசன், மூவேந்தன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் பிரிவு 57 NDPS Act ன் கீழான அறிக்கையை நாகப்பட்டிணம் பொறுப்பு போதை பொருள் நுண்ணறிவு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளருக்கு அனுப்பி வைத்தேன். அந்த அறிக்கை அதசாஆ.11. எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் வழக்கு கோப்புகளை மேல் விசாரணைக்கு காவல் துணை கண்காணிப்பாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

அசா1 அருண்பிரசாத் கொடுத்த தனி அறிக்கையை தான் முதல் தகவல் அறிக்கையாக மாற்றியுள்ளேன் என்றால் சரிதான். 11.30 மணிக்கு தனி அறிக்கையை தடயத்துடன் என்னிடம் ஒப்படைத்ததாக கூறி தான் கையெழுத்திட்டு ஒப்படைத்துள்ளார் என்றால் சரிதான். 25 மூட்டைகளில் இருந்த பொருள்களை சோதனை செய்தேன் என்று சொல்லியுள்ளார் எவ்வாறு சோதனை செய்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஒவ்வொரு மூட்டைகளில் இருந்த பொட்டலங்களை பிரித்து பார்த்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் 3 வது காளத்தில் தகவல் 18.30 மணிக்கு வந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசா1 கொடுத்த தனி அறிக்கையை 1.30 மணிக்கு பெற்றேன். ஆனால் 18.30 மணிக்கு தான் வழக்கு பதிவு செய்தேன். 2.12.2019 ம் தேதி மாலை 6.00 மணிக்கு தான் எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். 24 மணி நேரத்திற்குள் எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தாததால் ஆவணங்களில் நேரங்களை என் வசதிக்கேற்ப பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கின் தடயங்களை அசா1 அருண்பிரசாத் தான் என்னிடம் ஒப்படைத்தார். அதற்கான கையொப்பம் மகசரில் அவரிடம் பெறவில்லை என்றால் சரிதான். மாதிரிக்காவும், ரசாயண பகுப்பாய்வுக்காகவும் எடுக்கப்பட்டதாக சொல்லும் 50 பொட்டலங்களில் மகசர்களில் S1, S2.... என்று குறியீடு எதுவும் வழங்கப்படவில்லை. S1, S2.... S50 என 50 பொட்டலங்களில் குறிப்பிடப்பட்டுள்ள குறியீடு சாட்சிகன் முன்னிலையிலோ, எதிரிகள் முன்னிலையிலோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். S1, S2.... S50 என்று யாரால் சான்று பொருள்கள் மீது குறியீடு செய்யப்பட்டது என்று

என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான். அதசாஆ.11 ஐ எத்தனை மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளர் பெற்றுக்கொண்டார் என்ற குறிப்பு இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தை எனக்கு கியூ பிராஞ்ச் போலிசார் அடையாளம் காட்டியதாக எந்த ஆவணங்களிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் வழக்கிற்கு எற்றவாறு ஒப்புதல் வாக்குமூலங்களை நானே தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அசா1 ஆஜர் செய்த சான்று பொருள்களை நான் பெறவில்லை என்றாலும் நான் தயார் செய்த சான்றுபொருள்களை காவல் துணை கண்காணிப்பாளர் பெறவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்னவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், என் வழக்கிற்கு தோதுவாக ஆவணங்களை தயார் செய்து அதற்கு ஏற்றார்போல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்